# திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
# பெரிய திருமொழி
# எட்டாம் பத்து

## ஆறாம் திருமொழி - தொண்டீர்
## திருக்கண்ணபுரம் 6

** தொண்டீர்! உய்யும் வகை கண்டேன் *
துளங்கா அரக்கர் துளங்க * முன்
திண்தோள் நிமிரச் சிலை வளையச் *
சிறிதே முனிந்த திருமார்பன் **
வண்டார் கூந்தல் மலர்மங்கை *
வடிக்கண் மடந்தை மான் நோக்கம்
கண்டான் * கண்டு கொண்டு உகந்த *
கண்ணபுரம் நாம் தொழுதுமே 1

பொருந்தா அரக்கர் வெஞ்சமத்துப் *
பொன்ற அன்று புள் ஊர்ந்து *
பெருந்தோள் மாலி தலை புரளப் *
பேர்ந்த அரக்கர் தென்னிலங்கை **
இருந்தார் தம்மை உடன் கொண்டு * அங்கு
எழிலார் பிலத்துப் புக்கொளிப்ப *
கருந்தாள் சிலை கைக்கொண்டான் ஊர் *
கண்ணபுரம் நாம் தொழுதுமே 2

வல்லி இடையாள் பொருட்டாக *
மதிள் நீர் இலங்கையார் கோவை *
அல்லல் செய்து வெஞ்சமத்துள் *
ஆற்றல் மிகுந்த ஆற்றலான் **
வல்லாள் அரக்கர் குலப் பாவை வாட *
முனி தன் வேள்வியை *
கல்விச் சிலையால் காத்தான் ஊர் *
கண்ணபுரம் நாம் தொழுதுமே 3

மல்லை முந்நீர் அதர்பட *
வரிவெஞ்சிலை கால் வளைவித்து *
கொல்லை விலங்கு பணி செய்யக் *
கொடியோன் இலங்கை புகல் உற்று **
தொல்லை மரங்கள் புகப் பெய்து *
துவலை நிமிர்ந்து வான் அணவ *
கல்லால் கடலை அடைத்தான் ஊர் *
கண்ணபுரம் நாம் தொழுதுமே 4

ஆமை ஆகி அரி ஆகி *
அன்னம் ஆகி * அந்தணர் தம்
ஓமம் ஆகி ஊழி ஆகி *
உவரி சூழ்ந்த நெடும் புணரி **
சேம மதிள் சூழ் இலங்கைக் கோன் *
சிரமும் கரமும் துணித்து * முன்
காமற் பயந்தான் கருதும் ஊர் *
கண்ணபுரம் நாம் தொழுதுமே 5

வருந்தாதிரு நீ மடநெஞ்சே! *
நம் மேல் வினைகள் வாரா * முன்
திருந்தா அரக்கர் தென்னிலங்கை *
செந்தீ உண்ணச் சிவந்து ஒரு நாள் **
பெருந்தோள் வாணற்கு அருள் புரிந்து *
பின்னை மணாளன் ஆகி * முன்
கருந்தாள் களிறொன்று ஒசித்தான் ஊர் *
கண்ணபுரம் நாம் தொழுதுமே 6

இலையார் மலர்ப் பூம்பொய்கை வாய் *
முதலை தன்னால் அடர்ப்புண்டு *
கொலையார் வேழம் நடுக்குற்றுக்
குலைய * அதனுக்கு அருள் புரிந்தான் **
அலைநீர் இலங்கைத் தசக்கிரீவற்கு *
இளையோற்கு அரசை அருளி * முன்
கலைமாச் சிலையால் எய்தான் ஊர் *
கண்ணபுரம் நாம் தொழுதுமே 7

மாலாய் மனமே! அருந்துயரில் *
வருந்தாதிரு நீ * வலி மிக்க
கால் ஆர் மருதும் காய் சினத்த
கழுதும் * கதமாக் கழுதையும் **
மால் ஆர் விடையும் மதகரியும் *
மல்லர் உயிரும் மடிவித்து *
காலால் சகடம் பாய்ந்தான் ஊர் *
கண்ணபுரம் நாம் தொழுதுமே 8

குன்றால் மாரி பழுதாக்கிக் *
கொடியேர் இடையாள் பொருட்டாக *
வன்தாள் விடை ஏழ் அன்று அடர்த்த *
வானோர் பெருமான் மாமாயன் **
சென்றான் தூது பஞ்சவர்க்காய்த் *
திரிகாற் சகடம் சினம் அழித்து *
கன்றால் விளங்காய் எறிந்தான் ஊர் *
கண்ணபுரம் நாம் தொழுதுமே 9

** கருமாமுகில் தோய் நெடுமாடக் *
    கண்ணபுரத்து எம் அடிகளை *
திருமாமகளால் அருள் மாரி *
    செழுநீர் ஆலி வளநாடன் **
மருவார் புயற்கைக் கலிகன்றி *
    மங்கை வேந்தன் ஒலி வல்லார் *
இருமாநிலத்துக்கு அரசாகி *
    இமையோர் இறைஞ்ச வாழ்வாரே 10

**அடிவரவு:** தொண்டீர் பொருந்தா வல்லி மல்லை ஆமை வருந்தாது இலை மால் குன்றால் கருமா வியம்

**திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்**

---